தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் செயல்முறைகள், சென்னை-6

ந.க.எண். 21109/என்2/இ1/2020 நாள் 16.10.2020

---

பொருள் பள்ளிக் கல்வி - அனைத்து அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளின் கழிவறைகள் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் சார்பான அறிவுரைகள் வழங்கல் சார்பு.

---

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்க விழைகின்றேன்.

தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளியில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளனவா என ஆய்வின்போது தங்களால் கண்டறியப்பட்ட கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

அரசு உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்போது கழிவறைகள் மாணவ/மாணவிகளுக்கு தனித்தனியாக அளிக்கப்பட்டு வருகின்றன. இவைகள் போதுமானதாக இல்லை என அறியப்பட்டால் உடனுக்குடன் SSA, RMSA , தொண்டு நிறுவனம், CSR நிதி , சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிதி மூலம் கட்டப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டில் கொண்டுவரப்படுகின்றன.

ஊரக பகுதியில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க / நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளில் உள்ள கழிவறைகளை தூய்மையாக பேணுதல் சார்பாக வழிகாட்டு நெறிமுறைகளை அரசாணை நிலை எண் 181 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி,1) துறை நாள் 30.11.2015 மூலம் ஆணையிடப்பட்டது.

மேலும் நகராட்சி மற்றும் மாநகராட்சியில் அமைந்துள்ள நகராட்சி மற்றும் மாநகராட்சி ஒன்றிய தொடக்க / நடுநிலைப்பள்ளிகள் மற்றும் அரசு உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளில் உள்ள கழிவறைகளை தூய்மையாக பேணுதல் சார்பாக வழிகாட்டு நெறிமுறைகளை அரசாணை நிலை எண் 166 நகராட்சி நிர்வாகம்

மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள் 23.11.2016 மூலம் ஆணையிடப்பட்டது. அதன்படி அனைத்து பள்ளிகளில் உள்ள கழிவறைகளை பராமரிப்பு சார்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை தங்கள் ஆய்வின் போது சரிபார்க்கப்பட்டு வருகின்றன என அறியமுடிகிறது.(அரசாணை நகல் இணைக்கப்பட்டுள்ளது).

மேலும் பல பள்ளிகளில் கழிவறைகள் உபயோக படுத்த இயலா நிலையிலும் மற்றும் சிறு சிறு பழுதுகள் மேற்கொள்ளவேண்டியுள்ளதாகவும் காணப்படுகின்றதை சம்மந்தப்பட்ட பள்ளித்தலைமை ஆசிரியர் கண்டறிந்து அதனை சீர் செய்ய உரிய அறிவுரைகளை பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அளித்து, கழிவறைகளை சுத்தமாக இருக்கவும் மற்றும் அவைகளை மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அவை அனைத்தும் மாணவ /மாணவியர்கள் நலன் கருதி உறுதியாக செயல்படுத்த வேண்டும்.

இதனால் ஏற்படும், செலவினத்தை பள்ளிக் கட்டண சிறப்பு நிதியிலிருந்து செலவிட இதன் மூலம் அனுமதிக்கப்படுகிறது. ஆய்வு அலுவலர்கள் பார்வையிடும்போது பள்ளியில் உள்ள சுற்றுபுறத்தையும் மற்றும் கழிவறைகளையும், சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருப்பதை தனிக்கவனம் செலுத்தி உறுதிபடுத்தப்படவேண்டும். மேலும் இதில் எந்தவிதமான சுணக்கமும் காணப்படாமல் செயல்பட இதன் மூலம் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – அரசாணையின் நகல்(2)

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்
அரசு முதன்மைச் செயலாளர்
பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை–9 (அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

— RD —

265

சுருக்கம்

ஊராட்சி ஒன்றிய துப்புரவு – ஊரகப்பகுதிகளில் அமைந்துள்ள தொடக்க/நடுநிலைப்பள்ளிகள் மற்றும் அரசுப்பள்ளிகளிலுள்ள கழிப்பறைகளைத் தூய்மையாகப் பேணுதல் – வழிகாட்டி நெறிமுறைகளுக்கு ஏற்பளிக்கப்படுகிறது – ஆணைகள்– வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அதி.1) துறை

அரசாணை (நிலை) எண்.151 நாள். 30.11.2015

படிக்கவும்:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் 31.08.2015ஆம் நாளிட்ட 60354/2015/NBA-1ஆம் எண் கடிதம்.

ஆணை

பள்ளிக்கல்வி (S.E.4(1)) துறையின் 13.04.2015ஆம் நாளிட்ட 77ஆம் (நிலை) எண் அரசாணையில், உள்ளாட்சி அமைப்புகளின் அந்தந்த அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பள்ளிகளிலுள்ள கழிப்பறைகளைப் பேணும் பொறுப்பு உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், மேற்சொன்ன ஆணையைச் செயல்படுத்துவதற்கு பின்வரும் நடைமுறை பற்றி கருத்து தெரிவிக்கப்படுகிறது என்று மேலும் தெரிவித்துள்ளார். அவை வருமாறு:-

I. முகவரமைப்பு ஒன்றின் வாயிலாக அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் முழுநேர/பகுதிநேரத் துப்புரவுப் பணியாளர்கள் வாயிலாக அல்லது தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்துவதன் வாயிலாக,

II. இதற்கு தேவைப்படும் துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையானது, அவசரத் தேவைகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் முடிவுசெய்யப்படலாம்.

III. அத்தகைய துப்புரவுப்பணியாளர்களின் வருகையும், அவர்களின் பணியும் அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களால் கண்காணிக்கப்படும்.

IV. தூய்மைப்படுத்துவதற்குத் தேவைப்படும் உபகரணங்களும் பொருட்களும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட வேண்டும்.

V. இச்செலவினமானது, ஊரக உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில் திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்தும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில், கல்வி மேல்வரியிலிருந்து (செஸ்) மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், பின்வரும் கருத்துக்களையும் கருதிப் பார்க்குமாறு சுட்டிக் காட்டியுள்ளார் :

a) இங்கு, ஏறத்தாழ 27,700 ஊராட்சி ஒன்றியத் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளும் 7,247 பள்ளிக் கல்வித் துறைப் பள்ளிகளும் உள்ளன. மொத்தத்தில் ஊரகப்பகுதிகளில் ஏறத்தாழ 34,947 அரசுப் பள்ளிகள் உள்ளன.

b) கழிவறையைத் தூய்மைப்படுத்தும் பணி என்பது, கொடுக்கப்பட்ட நாளின், குறிப்பாக பள்ளி வேலைநாட்களில் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்ற பணியாகும்.

c) சராசரியாக ஒரு மாதத்தில் 22 பணிநாட்களும், ஒரு கல்வியாண்டில் 10 பணி மாதங்களும் உள்ளன.

d) தற்போது, பல்வேறு துப்புரவு தொடர்பான பணிகளுக்காக, கிராம ஊராட்சிகளால் 24,928 முழுநேரத் துப்புரவுப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். எனவே, பள்ளிக் கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்துவதற்கு, அவர்கள் அனைவரையும் முழுமையாகப் பயன்படுத்த இயலாது.

e) பள்ளிக்கல்வி (S.E.4(1)) துறையின் 13.04.2015ஆம் நாளிட்ட 77ஆம் (நிலை) எண் அரசாணையின்படி, மேற்சொன்ன செயல்நோக்கங்களுக்கு, திடக்கழிவு மேலாண்மை நிதியினைப் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், பள்ளிக் கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்துவதற்கு பின்வரும் செலவினம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

**1) பகுதிநேரத் துப்புரவுப் பணியாளர்களைப் பணியமர்த்துவதற்கு ஆகும் செலவு**

பள்ளிக் கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்துவதற்கு, பகுதிநேரத் துப்புரவுப் பணியாளர்களைப் பணியமர்த்துவது தொடர்பாக ஆண்டொன்றுக்கு ஆகும் மொத்த செலவினம் ஏறத்தாழ ரூ.39.79 கோடி ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக மதிப்பிடப்படுகிறது. இதன் விவரம் வருமாறு:-

| தொடர் எண் | பள்ளிகளின் வகை | பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை | மாதம் ஒன்றுக்கு ஒரு பள்ளிக்கான தொகை (ரூ.) | ஆண்டொன்றுக் கான மொத்தத் தேவை. (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | ஊராட்சி ஒன்றிய /அரசுத் தொடக்கப் பள்ளிகள் | 22,796 | 750 | 2051.64 |

567-

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | ஊராட்சி ஒன்றிய / அரசு நடுநிலைப் பள்ளிகள் | 6,797 | 1,000 | 815.64 |
| 3 | அரசு உயர்நிலைப் பள்ளிகள் | 2,892 | 1,500 | 520.56 |
| 4 | அரசு மேல்நிலைப் பள்ளிகள் | 2,462 | 2,000 | 590.88 |
| | பெருமொத்தம் | 34,947 | | 3978.72 |

**2) தூய்மைப்படுத்தும் பொருட்களுக்கு வகைசெய்தல்**

கழிப்பறையைத் தூய்மைப்படுத்துவதற்கு வாளி, குவளை மற்றும் பயன்பாட்டுப் பொருட்களான துடைப்பம், பிளீச்சிங் பவுடர் போன்றவை தேவைப்படுகின்றன. இவற்றில் வாளியும், குவளையும் நெடுநாள் பயன்பாட்டிற்கு உரியவையாகவும் மற்றவை அவ்வப்போது கழித்துக்கட்டப்பட்டு புதிதாக வாங்கப்பட வேண்டியவையாகவும் இருக்கின்றன. தூய்மைப்படுத்தும் பொருட்களுக்குத் தேவைப்படும் உத்தேச நிதி பற்றிய விவரம் வருமாறு:-

| தொடர் எண் | பள்ளிகளின் வகை | பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை | மாதம் ஒன்றுக்கு ஒரு பள்ளிக்கான தொகை (ரூ.) | ஆண்டொன்றுக் கான மொத்தத் தேவை. (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | ஊராட்சி ஒன்றிய / அரசுத் தொடக்கப் பள்ளிகள் | 22,796 | 300 | 820.66 |
| 2 | ஊராட்சி ஒன்றிய / அரசு நடுநிலைப்பள்ளிகள் | 6,797 | 500 | 407.82 |
| 3 | அரசு உயர்நிலைப் பள்ளிகள் | 2,892 | 750 | 260.28 |
| 4 | அரசு மேல்நிலைப் பள்ளிகள் | 2,462 | 1000 | 295.44 |
| | பெருமொத்தம் | 34,947 | | 1784.20 |

எனவே, துப்புரவுப் பணியாளர்களைப் பணியமர்த்துவதற்கும், ஆண்டொன்றுக்கு தூய்மைப் பொருட்களுக்கு ஆகும் செலவுத் தொகையும் ஏறத்தாழ ரூ.57.63 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விவரம் வருமாறு

| | |
|---|---|
| துப்புரவுப் பணியாளர்களைப் பணியமர்த்துவதற்கு ஆகும் செலவு | : ரூ.39.79 கோடி |
| தூய்மைப்படுத்தும் பொருட்களுக்கான செலவு | : ரூ.17.84 கோடி |
| மொத்தம் | : ரூ.57.63 கோடி |

அரசின் பள்ளிக் கல்வித் துறையால் ஏற்கனவே உத்தரவிடப்பட்டவாறாக, மேற்சொன்ன செலவினமானது, திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் (காண்க : பள்ளிக்கல்வி (S.E.4(1)) துறையின் 13.04.2015ஆம் நாளிட்ட 77ஆம் (நிலை) எண் அரசாணை). வழிகாட்டி நெறிமுறைகள் வழிவகையின்படி மாவட்ட ஆட்சியர்கள் அளித்த தேவைகளின் அடிப்படையில், அவர்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், நிதி வழங்க வேண்டும் என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார். பதிலுக்கு, மாவட்ட ஆட்சியர்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதிகளை வழங்குவர்.

இதுதொடர்பாக, பின்வரும் கணக்குத் தலைப்பில், திடக்கழிவு மேலாண்மைக்காக 2015–16 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டமதிப்பீட்டில், ஏற்கனவே, ரூ.200 கோடி வகை செய்யப்பட்டுள்ளது என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

*2515–00– ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டம் – 800 ஏனைய செலவினம் – I திட்டம் சாரா – தூய்மை கிராம இயக்கத் திட்டத்திற்கு AO மானியங்கள் – 09 உதவி மானியம் – 03 குறிப்பிட்ட திட்டத்திற்கான மானியங்கள் (த.தொ.கு.எண்.2515–00–800– AO-0939)*

3. எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், ஊரகப் பகுதிகளிலுள்ள பள்ளிக்கழிப்பறைகளை தூய்மையாகப் பேணுவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைத் தொகைகளில் மாவட்ட ஆட்சியர்கள் வாயிலாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு மேற்சொன்ன கணக்குத் தலைப்பிலிருந்து, 2015–16ஆம் ஆண்டிற்குத் தேவைப்படும் தொகையைப் பெற்று வழங்குவதற்கும், ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளிலும் அரசுப் பள்ளிகளிலும் உள்ள பள்ளிக் கழிப்பறைகளைத் தூய்மையாகப் பேணுவதற்கான வழிகாட்டி நெறிமுறைகளுக்கு ஏற்பளிப்பதற்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்குமாறு அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அரசு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பை கவனமுடன் பரிசீலித்த பின்னர், இந்த ஆணையில் இணைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஊரகப் பகுதிகளிலுள்ள பள்ளிக்கழிப்பறைகளைத் தூய்மையாகப் பேணுவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைத் தொகைகளில் மாவட்ட ஆட்சியர்கள் வாயிலாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு 2015–16ஆம். ஆண்டிற்குத் தேவைப்படும் தொகையைப் பெற்று வழங்குவதற்கும், ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளிலும் அரசுப் பள்ளிகளிலும் உள்ள பள்ளிக் கழிப்பறைகளைத் தூய்மையாகப் பேணுவதற்கான வழிகாட்டி நெறிமுறைகளுக்கு

ஏற்பளிப்பதற்கும், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கிறது. அந்நிபந்தனைகள் பின்வருமாறு:-

1) உள்ளாட்சி அமைப்புகளில், தற்போது பணிபுரிந்து வருகின்ற துப்புரவுப் பணியாளர்கள், சாத்தியமான இடங்களில், பள்ளிக்கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்படலாம்.
2) அவ்வாறு இயலாத நிலையில், பகுதிநேர துப்புரவுப் பணியாளர்களைப் பணிமர்த்துவதற்குப் பதிலாக, வெளிக்கொள்முதல் (out sourced) முறையில் இப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
3) பள்ளிக்கல்வித் துறையின் 13.04.2015ஆம் நாளிட்ட 77ஆம் (நிலை) எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி, தேவைப்படும் தூய்மைப்படுத்தும் பொருட்களும், கருவிகளும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணையின்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15 வாயிலாக)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15 வாயிலாக)

<u>நகல் பெறுவோர்</u>
முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை – 9
நிதித் (ஊவ) துறை, சென்னை – 9
மாநில கணக்குத் துறைத் தலைவர், சென்னை – 18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35
மாண்புமிகு அமைச்சரின் (ந.நி., ஊ.வ., சட்ட.ம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள்) முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
அரசு செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை – 9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (அந–II) துறை, சென்னை – 9
தேசிய தகவல் மையம், சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

N2

## ABSTRACT

School toilets - Maintenance of School toilets in Primary/Middle/High/Higher Secondary schools located in Corporation and Municipal areas – Entrusting the maintenance work to the Private Service Providers – Expenditure to be met from Educational Cess realised through property tax – Permission accorded – Orders issued.

---

**Municipal Administration and Water Supply (MA.IV) Department**

G.O. (MS) No. 166

Dated: 23 -11-2016.
(திருவள்ளுவர் ஆண்டு 2047,
துன்முகி, கார்த்திகை – 8)

**Read:**

1) Announcement made by the Hon'ble Chief Minister under Rule 110 on 30/07/2014.

**Read also:**

2) G.O.(Ms) No.77, School Education Department, Dated :13/04/2015.

3) From the Commissioner of Municipal Administration Lr.Roc.No.14982/J2/2015, Dated 3/06/2016

---

**ORDER:**

It was announced by the Hon'ble Chief Minister on the floor of the Assembly under rule 110 on 30/07/2014 that an amount of Rs. 160.77 Crore would be provided for maintenance of toilets in all Government Schools. Consequent to the above announcement, orders have been issued vide order second read above entrusting the local bodies with the responsibility of maintenance of toilets in all the Government Schools and local body Schools located in their respective jurisdiction. It has also been ordered among other points, in respect of Urban Local Bodies' expenditure towards maintenance works shall be met out from the Education Cess collected by the Urban Local Bodies' and the Solid Waste Management fund in respect of rural areas and Town Panchayats. The expenditure shall be met out from the Solid Waste Management fund.

2. The Commissioner of Municipal Administration in his letter third read above has sent the proposals for maintenance of school toilets in urban areas as follows:-

The maintenance of toilets in Corporations / Municipal Schools is being taken care by the local bodies merely by deputing Sanitary Workers on daily basis. The materials required for the maintenance of the toilets are met out by the parent teachers association formed under the chairmanship of the Head Masters of the concerned

schools. Since the responsibility has been fixed to the Corporation / Municipalities to maintain the toilets clean, it has been proposed to privatize the cleaning of toilets including sweeping the class rooms, children's dining hall etc., with adequate number of Sanitary workers, Sweepers, Supervisors to keep the entire School clean.

**The strategy plan to privatize the cleaning activities of school toilets**

I. **Engagement of Private Service Providers** :

(i) Privatizing the house keeping activities of the school to look after the functions includes cleaning of toilets, removal of bushes around the toilets, sweeping the class rooms & dining hall, attending the plumbing and electrical works, removal of cob webs in the class room once in a week.

(ii) A Private Service providing agency shall be engaged as per the Tender Transparency Act. The Community Based Organizations / Self Help Groups who have registered themselves as service providing agency in the Corporations and Municipalities shall be given opportunity to participate in the tender.

(iii) Clubbing of schools for bidding so that technical and supervisory manpower development becomes viable.

(iv). An estimation shall be prepared by the Urban Local Body adopting the rate (per day) fixed by the District Collector for the proposed sweepers / sanitary labourers.

(v) The required materials shall be determined based on the number of toilets, number of cleanings per day.

(vi) The Sweepers / Sanitary labourers and supervisors are to be engaged by the private service agency.

(vii) The Co-education, Schools shall be provided with minimum 1 female worker and 1 male worker for cleaning of toilet and one sweeper for cleaning of the school campus.

(viii) For the Girls' schools, minimum 2 female workers shall be provided along with one sweeper.

(ix) For the Boys' Schools, minimum 2 Male / Female workers shall be provided along with one Sweeper.

(x) The Service provider shall maintain a daily cleaning register with the endorsement of Headmaster.

(xi) A separate consumable register (item wise – page wise) indicating the indent, receipt and issue details shall be maintained with the endorsement of Headmaster.

(xii) The successful Private Service Provider should have an agreement with the Local Body and should have the witness of Head Master of the concerned school. This agreement may be terminated, if the service is not satisfied.

(xiii) The Private Service Provider shall be paid on monthly basis, for the amount quoted in the tender duly after getting the performance satisfaction letter of the Head Master of the concerned school.

**II. Periodicity of cleaning**

1. The Sweeper / Sanitary labourers (Male & Female) shall be engaged for full working day (as per the school hours of the concerned school) for maintaining the toilets.
2. The sweeper should sweep the school campus an hour in advance and the lunch area should be swept after the lunch hour.
3. The toilets should be cleaned thrice in the morning and twice in the afternoon as per the instructions of school administration.
4. The female worker should take care of disposal of napkins using the incinerators available on daily basis.

**III. Provision for cleaning materials**

(1) The Private Service provider should supply the required buckets, mugs, Urinal cubes and materials like Broom stick, Bleaching powder etc., for cleaning of the toilets. It should be durable and have to be replenished from time to time.

(2) The Private Service provider is responsible for the protective measures as per the prevailing rules in force.

(3) Phenyl, Toilet Bowl cleaner, Floor cleaner, Cleaning Acid, Soft broom, Hand broom, Floor brush set, Floor mope, Hand gloves and Face mask are the other cleaning materials.

(4) The existing Girls' toilet blocks in schools should be improved as Girls friendly toilets with facilities for safe disposal of soiled sanitary Napkins.

3. The Government, after careful examination, accept the proposal of the Commissioner of Municipal Administration to permit the Urban Local Bodies to entrust the works towards maintenance of Government schools/Urban Local body schools located in the respective jurisdiction of urban local bodies to Private Service Providers and to pay them from the funds of educational cess realised through Property tax and orders accordingly. The Commissioner, Greater Chennai Corporation and the Commissioner of Municipal Administration should submit the schoolwise reports on above said arrangements made within a month. They should also arrange frequent inspections to ensure that the appointed agencies are maintaining the toilets satisfactorily.

4. This order issues with the concurrence of Finance Department vide its U.O.No.37499/Finance (MAWS)/2016, Dated 08/11/2016.

(By Order of the Governor)

K. PHANINDRA REDDY
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

To
The Commissioner of Municipal Administration, Chennai – 5.
The Commissioner, Greater Chennai Corporation Chennai – 3.

Copy to

The Senior Personal Assistant to the Hon'ble Minister (Municipal Administration, Rural Development and Implementation of Special Program) Secretariat, Chennai -9
The Finance (MAWS) Department, Chennai – 9.
The School Education Department, Secretariat, Chennai-9.
The Senior Principal Private Secretary to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Chennai-9.
The Municipal Administration and Water Supply (OP.II)/MC.I/ MC.II/ MC.VI) Department, Chennai -9.
SF/SC

/Forwarded by Order/

SECTION OFFICER.